SURESH' IAS ACADEMY




# 17.05.2026 செய்திகள்

## நாடாளுமன்ற நிலைக் குழுக்கள் ஆலோசனைக் கூட்டம் :

- நாடாளுமன்ற நிலைக் குழுவில் 31 உறுப்பினர்கள் இடம் பெறுவர். இதற்கு மக்களவையில் இருந்து 21 உறுப்பினர்களும் மாநிலங்களவையில் இருந்து 10 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- அதேபோல் இந்திய பொது கணக்கு குழுவானது, மக்களையில் இருந்து 15 உறுப்பினர்களையும் மாநிலங்களவையில் இருந்து 7 உறுப்பினர்களையும் கொண்டது.
- 11 உறுப்பினர்கள் கலந்து கொண்டால் மட்டுமே நாடாளுமன்ற நிலைக் குழுக்களின் ஆலோசனைக் கூட்டங்களை நடத்த முடியும்.

### பொருளாதார நெருக்கடிக்கு சிக்கன நடவடிக்கை

» காரணம் என்ன ?

- நாட்டின் ஜி.டி.பி., எனப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், ஒட்டுமொத்த பொதுக்கடன், சம வீதத்திற்கு மேல் உள்ளது. இதில், மத்திய அரசின் கடன் மட்டும் 55 சதவீதம், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, முன்னெப்போதும் இல்லாத அளவாக 95 ரூபாயாக சரிந்து பின்னடைவை சந்தித்துள்ளது.
- இதனால் ஏற்றுமதிக்கு தேவையான அன்னிய செலாவணி இருப்பும் குறைந்து வருகிறது. அன்னிய செலாவணி இருப்பே நாட்டின் இறக்குமதியை தீர்மானிக்கும். அதன்படி, நம் நாட்டின் அன்னிய செலாவணி இருப்பு, பிப்ரவரியில் 72,800 கோடி டாலராக இருந்தது. தற்போது, 69,000 கோடி டாலராக குறைந்துள்ளது.
- இறக்குமதிக்கும், ஏற்றுமதிக்கும் இடையிலான பற்றாக்குறையை சொல்லும் நடப்பு கணக்கு பற்றாக்குறையும் அதிகரித்து வருகிறது.
- இந்த ஆண்டு நம் நாட்டின் நடப்பு கணக்கு பற்றாக்குறை, 8,400 கோடி டாலராக உயரும் என, ஐ.எம்.எப்., எனப்படும் சர்வதேச நாணய நிதியம் கணித்துள்ளது.

## அனிமேஷனுக்கு பால்கே விருது

- 2026-ஆம் ஆண்டுக்கான தாதாசாகேப் பால்கே திரைப்பட விழாவில், "தி வைல்ட் கால்" திரைப்படம் "சிறந்த அனிமேஷன் திரைப்படத்துக்கான" விருதை வென்றுள்ளது.
- லைட்ஸ் ஆன் மீடியாவின் அனிமேஷன் பணிகள் வெங்கி சந்திரசேகர் தலைமையில் உருவாக்கப்பட்டது. இவர்களோடு இணைந்து ஜிப்ரான் வைபோதாவின் பின்னணி இசை நேர்த்தியாக உருவாக்கப்பட்டு இருந்தது.
- இத்திரைப்படம் சிங்கம், புலிகள் இந்தியாவின் பல்லுயிர்ப் பெருக்க மையங்களான இந்தியப் பெருங்கடல், மேற்குத் தொடர்ச்சி மலைகள், இமயமலை, தார் பாலைவனம் வழியாகப் பயணிப்பதைப் பின்தொடர்கிறது. மேலும் இந்திய யானை, பெருங்குருவி உள்பட 23 குறிப்பிடத்தக்க உயிரினங்களை பார்வையாளர்களுக்கு அறிமுகப்படுத்துவதோடு, பாதுகாப்பு, காலநிலை நடவடிக்கை, வாழ்விடப் பாதுகாப்பு, மனித – வனவிலங்கு சகவாழ்வு குறித்த முக்கிய செய்திகளையும் வழங்குகிறது.

» இறக்குமதி சுமை :

- நாட்டின் மொத்த இறக்குமதி மதிப்பு 77,500 கோடி டாலர். அதில், 31 சதவீதமான, 24,000 கோடி டாலர் கச்சா எண்ணெய், தங்கம், சமையல் எண்ணெய், உரம் ஆகியவற்றின் இறக்குமதிக்கே செலவிடப்படுகிறது.
- நாட்டின் கச்சா எண்ணெய் தேவையில், 90 சதவீதம் இறக்குமதி செய்யப்படும் நிலையில், இதன் விலை ஒரு பேரலுக்கு 114 டாலராக உயர்ந்துள்ளது.
- இரண்டாவதாக தங்கம், உலகளவில் தங்கம் இறக்குமதியில் இந்தியா, 5வது இடத்தில் உள்ளது. தங்கம் வாங்குவதை பாதியாக குறைத்தால், 3,600 கோடி டாலர் அன்னிய செலாவணியை மிச்சப்படுத்தலாம்.
- சமையல் எண்ணெய் மற்றும் உரங்கள் இறக்குமதியும் அரசின் கஜானாவை காலி செய்கின்றன.

» 1991 நெருக்கடி

- முன்னதாக, 1991ல் வளைகுடா போர் வெடித்த போது, கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்தது. இதனால், இந்தியாவின் இறக்குமதி செலவு அதிகரித்து, அன்னிய செலாவணி கையிருப்பு மிகவும் குறைந்தது.
- வெளிநாடுகளுக்கு செலுத்த வேண்டிய தொகைக்கு கூட டாலர் இல்லாத நிலை ஏற்பட்டதால், இந்தியா 47,000 கிலோ தங்கத்தை வெளிநாட்டு வங்கிகளில் அடமானம் வைத்து அவசர கடன் பெற்றது. நாட்டின் பொருளாதார வரலாற்றில் மிகப்பெரிய நெருக்கடிகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது.
- அதே போன்றதொரு சூழல், தற்போதைய இஸ்ரேல் – ஈரான் போரால் மீண்டும் வராமல் தடுக்கவே, இந்த தற்காப்பு நடவடிக்கை எடுக்கப்படுவதாக பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர்.

## ஆனைமங்கலம் சோழர் கால செப்பேடுகள்

- இந்தச் செப்பேடுகள், 18ம் நூற்றாண்டில் டச்சுக் காலனிய ஆட்சியின் போது தமிழகத்தின் நாகப்பட்டினத்தில் இருந்து நெதர்லாந்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. 1862-ல் இருந்து தற்போது வரை அந்த செப்பேடுகள் அங்கு உள்ள லெய்டன் பல்கலையில் வைக்கப்பட்டிருந்தன.
- இந்த செப்பேடுகளை மீட்க இந்தியா பல ஆண்டுகளாக தூதரக முயற்சிகளை மேற்கொண்டு வந்தது. 2022-ல் நெதர்லாந்து காலனிய காலப் பொருட்களை அந்தந்த நாடுகளுக்கு திருப்பி அளிக்கும் கொள்கையை அறிவித்த பின் இந்த முயற்சி வேகம் பெற்றது. தற்போது அதில் வெற்றி கிடைத்துள்ளது.

## வெள்ளி இறக்குமதிக்கு மத்திய அரசு கட்டுப்பாடு

- முன்னதாக, தங்கம் மற்றும் வெள்ளி மீதான இறக்குமதி வரியை 6 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக மத்திய அரசு அதிகரித்தது. அதைத் தொடர்ந்து, முன்கூட்டிய அங்கீகாரத் திட்டத்தின்கீழ் ரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள் ஏற்றுமதியாளர்கள் வரியின்றி தங்கத்தை இறக்குமதி செய்வதற்கான விதிகளையும் அந்நிய வர்த்தக தலைமை இயக்குநரகம் கடுமையாக்கியது.
- அதன்படி, ஓர் உரிமத்துக்கு தங்கம் இறக்குமதி செய்வதற்கான உச்சவரம்பு 100 கிலோவாக நிர்ணயிக்கப்பட்டது.

» மாதந்தோறும் அறிக்கை :

- இந்த சலுகைகளை முதல்முறையாக பெற விண்ணப்பிப்பவராக இருப்பின் உற்பத்தி ஆலைகளை அதிகாரிகள் நேரடியாகக் கண்காணித்த பிறகே அனுமதி வழங்கவும் தெரிவிக்கப்பட்டது. அதேபோல் முந்தைய உரிமங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒப்புதல்களில் 50 சதவீதத்தை ஏற்றுமதி செய்திருந்தால் மட்டுமே இலவச அங்கீகாரம் அளிக்கப்படும்.

- மேலும், வரியின்றி தங்கத்தை இறக்குமதி செய்வோர் கணக்குத் தணிக்கையாளர்களின் உதவியோடு மாதம் இருமுறை மத்திய அரசுக்கு உரிய அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இந்த அறிக்கையை மாதந்தோறும் அந்நிய வர்த்தக வெளிநாட்டு தலைமை இயக்குநரகத்துக்கு நிறுவனங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

- 2025-26-ஆம் நிதியாண்டில் இந்தியாவின் தங்க இறக்குமதி ரூ. 6.9 லட்சம் கோடியாக அதிகரித்த நிலையில் தங்கம் இறக்குமதிக்கான வரியை அதிகரித்து மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டது.

## அந்தமானில் தொடங்கியது தென்மேற்குப் பருவமழை

- தென்கிழக்கு அரபிக் கடல், தென்மேற்கு - தென்கிழக்கு வங்கக் கடல், அந்தமான் கடல் பகுதிகள், ஸ்ரீவிஜயபுரம் உள்பட அந்தமான்-நிகோபார் தீவுப் பகுதிகளில் தென்மேற்குப் பருவமழை தொடங்கியது.

- இந்தியாவில் ஆண்டுதோறும் ஜூன் தொடங்கி செப்டம்பர் வரை தென்மேற்குப் பருவமழைக் காலமாகக் கருதப்படுகிறது. 4 மாதங்கள் நீடிக்கும் தென்மேற்குப் பருவமழையே நாட்டுக்கு 70 சதவீத மழைப் பொழிவைத் தருகிறது. இது வேளாண்மை, பொருளாதாரம் அணைகளில் நீர் இருப்புக்கு முக்கியமானது.

- தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் தமிழகத்தில் பெருமளவு மழைப் பொழிவு இருக்காது. எனினும், கேரள எல்லையையொட்டிய மாவட்டங்களில் பரவலாக மழை பெய்யும்.

- இந்நிலையில், தென்கிழக்கு அரபிக் கடல், தென்மேற்கு - தென்கிழக்கு வங்கக்கடல், அந்தமான் கடல், நிகோபார், ஸ்ரீவிஜயபுரம் உள்பட அந்தமான் தீவுகளின் சில பகுதிகளில் தென்மேற்குப் பருவமழை சனிக்கிழமை தொடங்கியது. அதைத் தொடர்ந்து, கேரளத்தில் தென்மேற்குப் பருவமழை முன்கூட்டியே, அதாவது இம்மாதம் 26-ஆம் தேதி தொடங்க வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

WHY SURESH...

✓ Comprehensive Coverage
✓ Expert Faculty & Mentorship
✓ Rigorous Testing & Analysis
✓ Structured Study Materials
✓ 24/7 Doubt - Clearing Support
✓ Offline Class / Online Class